அதேபோல 1998 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாள், அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள், "பத்திரிகையில் வருகின்ற ஹேஷியங்களை வைத்து நாம் இங்கே விவாதம் செய்வது அழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

மேலும், தி.மு.க. நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அதுசம்பந்தமான வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் இதுசம்பந்தமாக உறுப்பினர்கள் இங்கே பேசுவது சரியாக இருக்காது என்கிற காரணத்தால்தான் அதனை நான் அனுமதிக்க மறுக்கிறேன். நான் நேற்றைக்கே என்னுடைய தீர்ப்பை அளித்து விட்டேன். ஏதாவது ஆதாரம் இருக்குமென்று சொன்னால், அந்த ஆதாரத்தை என்னிடத்திலே கொண்டுவந்து கொடுத்தால், நான் அதை ஆய்வு செய்து, அது முறையாக இருந்தால் நிச்சயம் அனுமதிப்பேன் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்து, பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்து யாரும் விமர்சிக்க முடியாது, தயவுசெய்து இத்துடன் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of order எல்லாம் ஒன்றும் கிடையாது. உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதியில் முருங்கைப் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

2017 ஜூன் 15]

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதியில் முருங்கைப் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறிக்கை

1. திண்டுக்கல் மாவட்டத்தில் முருங்கைக்காய் சாகுபடி விவரம்:

வ. எண்	முருங்கை ரகம்	சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (ஹெக்டேரில்)	விளைச்சல் (மெட்ரிக் டன்)
1.	பி.கே.எம் 1 ரகம்	2,056	1,05,871
2.	நாட்டு ரகம்	41	1,025
	மொத்தம்	2,097	1,06,896

2. முருங்கைக்காய் பயன்பாடு

(மெட்ரிக் டன்)

அ.	திண்டுக்கல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உபயோகம்	:	5,436*
ஆ.	தமிழகத்தின் பிற பகுதிகளின் உபயோகம்	:	60,930**
இ.	பிற மாநிலம் / ஏற்றுமதி	:	40,620**
	மொத்தம்	:	1,06,896

* 5,436 மெட்ரிக் டன்னில், 2,150 மெட்ரிக் டன் முருங்கை பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மீதமுள்ளது நேரடி வீட்டு உபயோகம் மற்றும் உணவகங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**நேரடி வீட்டு உபயோகம் மற்றும் உணவகங்களுக்குப் பயன்படுகிறது.

[திரு. பா. பென்ஜமின்] [2017 ஜூன் 15

3. முருங்கைக்காயின் சந்தைவிலை

அ. 14–6–2017 அன்றைய விலை: ரூ.21,000/– (ஒரு மெட்ரிக் டன்னுக்கு)

ஆ. ஆண்டு சராசரி விலை: ரூ.20,000/– முதல் ரூ.25,000/– வரை (ஒரு மெட்ரிக் டன்னுக்கு)

4. முருங்கைப் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டியும், வேளாண் விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கோடும், திண்டுக்கல் மாவட்டத்தில் முருங்கைப் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை 2014–2015 ஆம் ஆண்டில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் ஒட்டன்சத்திரம் ஒன்றியம், ஜோகிப்பட்டி பஞ்சாயத்து, மாரனுத்துப்பட்டியில் ஆண்டிற்கு 2,150 மெட்ரிக் டன் முருங்கைக்காயை நீரற்ற முருங்கைப் பொடியாக்கி (De–hydrated Moringa Powder) 300 மெட்ரிக் டன் பொடி தயாரிக்கும் ஆலை ரூ.96 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தனியார் தொழில் முனைவோர் தொழில் துவங்கிட ரூ.17.00 இலட்சம் மானியத்துடன் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 17–8–2016 அன்று வணிக ரீதியாக உற்பத்தியைத் துவக்கியுள்ளது.

இந்நிறுவனத்தில் மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம், மைசூரிலிருந்து தொழில்நுட்பத்தினைப் பெற்று அதன்படி நீரற்ற முருங்கைக்காய் பொடியைத் தயாரித்துவருகின்றனர். இந்நிறுவனத்திற்கு மாவட்ட தொழில் மையம் வாயிலாக கீழ்க்கண்ட மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன:

1) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் தனிநபர் மானியம் ரூ.17.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் பின்முனை வட்டி மானியமாக ரூ.22,000/– வழங்கப்பட்டுள்ளது.

3) தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையின்படி 57.86 கிலோ வாட் மின் இணைப்பிற்கு 17–8–2016 முதல் 16–8–2019 வரை 3 ஆண்டுகளுக்கு மின் உபயோகக்

2017 ஜூன் 15] [திரு. பா. பென்ஜமின்]

கட்டணத்தில் 20 சதவீதம் மின் மானியம் தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தனியார் தொழில் முனைவோர்கள் இவ்வகை தொழில் துவங்க முன்வரும்பட்சத்தில், அரசு அனைத்து உதவிகளும் செய்து, 25 விழுக்காடு முதலீட்டு மானியம், 20 விழுக்காடு மின் மானியம், 25 விழுக்காடு மின்னாக்கி மானியம் உள்ளிட்ட அனைத்து மானியங்களும் வழங்கி ஊக்கப்படுத்த தயாராக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழ்நாட்டிலேயே மிகப்பெரிய காய்கறி மார்க்கெட்டான காந்தி மார்க்கெட் ஒட்டன்சத்திரம் நகரில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், இந்தியாவில் மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், குஜராத், ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலிருந்தும் ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி மார்க்கெட்டிற்கு முருங்கைக்காய் வரத்து உள்ளது. திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் அதிகளவில் முருங்கைப் பயிர் சாகுபடி செய்கிறார்கள். அருகிலுள்ள திருப்பூர் மாவட்டம், மூலனூர், கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பகுதிகளிலும் முருங்கை சாகுபடியை பிரதான தொழிலாகக் கொண்டு விவசாயிகள் அதிகமாகப் பயிரிடுகிறார்கள்.

முற்பகல் 11—30

சில நேரங்களில் விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர். எனவே, அரசே ஊரகத் தொழில் துறையின் மூலமாக முருங்கைப் பொடி உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையை அமைத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்தத் தொழிற்சாலையின் மூலமாக உற்பத்தி செய்கின்ற முருங்கைப் பொடியை வெளி மாநிலங்களுக்கும், வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தால் அந்தப் பகுதி விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு செல்கின்றேன்.

[2017 ஜூன் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைப் பொடி தொழிற்சாலை அரசின் சார்பில் அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை. திண்டுக்கல் மாவட்டத்தில் பி.கே.எம். 1 ரகம் மற்றும் நாட்டு ரகம் ஆகிய முருங்கை ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் முருங்கைக்காயின் ஆண்டு சராசரி மொத்த உற்பத்தி 1,06,896 மெட்ரிக் டன் ஆகும். திண்டுக்கல் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் 5,436 மெட்ரிக் டன் என்ற அளவில் உள்ளது. அதில் 2,150 மெட்ரிக் டன் முருங்கைப் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மீதமுள்ளது நேரடி வீட்டு உபயோகம் மற்றும் உணவகங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் முருங்கைப் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை 2014–2015 ஆம் ஆண்டில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் ஒட்டன்சத்திரம் ஒன்றியம், ஜோகிப்பட்டி பஞ்சாயத்து, மாரனுத்துப்பட்டியில் ஆண்டிற்கு 2,150 மெட்ரிக் டன் முருங்கைக்காயைப் பயன்படுத்தி நீரற்ற முருங்கைப் பொடியாக்கி (Dehydrated Moringa Powder) 300 மெட்ரிக் டன் பொடி தயாரிக்கும் ஆலை ரூ.96 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தனியார் தொழில் முனைவோர் தொழில் துவங்கிட ரூ.17 இலட்சம் மானியத்துடன் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 17–8–2016 அன்று வணிக ரீதியாக உற்பத்தியைத் துவக்கியுள்ளது. முருங்கைப் பவுடர் பயன்பாடு தற்போது உயர்தர உணவகங்களிலும் மற்றும் Ready to eat Food தயாரிக்கும் ஒரு சில சிறு நிறுவனங்களில் மட்டுமே உள்ளது. பொதுமக்களிடையே முருங்கைப் பவுடர் பயன்பாடு அதிக அளவில் பிரபலமில்லை. முருங்கைப் பவுடர் உற்பத்தி செய்தும் போதுமான அளவிற்கு விற்பனைக்கு வாய்ப்பு இல்லை. மேலும் முருங்கைப் பவுடர் ஏற்றுமதிக்கான வாய்ப்பும் அதிக அளவில் இல்லை. எனினும் ஆர்வமுடைய தனியார் தொழில்முனைவோர் தொழில் துவங்க முன்வரும்பட்சத்தில் அவர்கள் தொழில் துவங்க வழி காட்டுதல், வங்கிக் கடன் பெறுதல், அரசு மானியங்கள் பெறுதல் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்து தரும். புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்

நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபாய் வரையில் வங்கிக் கடன் பெற உதவி செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு நடத்தப்பட்ட NEET (National Eligibility cum Entrance Test) தேர்வு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் என் அறையிலே வந்து கேட்டார்கள். அதை Zero hour–ல் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். நான் வேறு அலுவலுக்குப் போய்விட்டேன். நீங்கள் அப்போது வெளிநடப்புச் செய்திருந்தீர்கள். இருந்தாலும் இன்றைக்கு ஒரு சிறப்பு நேர்வாக உங்களுக்கு நான் அனுமதியளிக்கிறேன். இதை சிறப்பு நேர்வாகக் கருதி, தகவல் கோரல் என்ற முறையிலே உங்களுக்கு நான் அனுமதியளிக்கிறேன். நீங்கள் என்ன சொல்ல வேண்டுமோ அதை சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* NEET *என்று சொல்லக்கூடிய* National Eligibility cum Entrance Test *இன்றைக்கு தமிழகம் முழுவதும் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்நாட்டிலே குறிப்பாக கிராமப்புற மாணவர்களை பெரிய அளவிலே பாதிக்கக்கூடிய சூழ்நிலை நிலவி வந்திருக்கிறது. இதிலே* eligibility, *அதாவது தகுதி என்கின்ற ஒரேயொரு வார்த்தையை வைத்துக்கொண்டு 1918 ஆம் ஆண்டிற்குப் பிறகு, 100 ஆண்டு காலமாக நாம் போராடிப் பெற்று வந்திருக்கக்கூடிய உரிமைகளை எல்லாம் இன்றைக்கு மத்திய அரசாங்கம் பறிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 2016–2017 மேல்நிலைத் தேர்வுகளைப் பொறுத்தமட்டிலே, 4.20 இலட்சம் பேர் மேல்நிலைத் தேர்வு எழுதியதிலே 6,870 பேர்கள்தான்* C.B.S.E. *மாணவர்கள். ஆனால் 98 சதவிகிதம் மாணவர்கள் மாநிலத் திட்டத்தில் படித்தவர்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, வெறும் 6,870 பேர்கள் எழுதியிருக்ககூடிய* C.B.S.E. *பாடத்திட்டத்தின் அடிப்படையிலே இந்த* NEET *தேர்வு நடைபெறுவது என்பது சமூக நீதிக் கொள்கைக்கும், மாநில உரிமைகளுக்கும் முற்றிலும் மாறாக இருக்கிறது. கிராமப்புற மாணவர்கள், நகர்ப்புற மாணவர்களோடு போட்டி போட முடியாத*